# இலங்கையில் 2024ஆம் ஆண்டு நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலும் மக்களின் வாக்களிப்பு நடாத்தையும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு

அ. கண்ணேராஜ்,

*சிரேஷ்டவிரிவுரையாளர்,*

*சமூகவிஞ்ஞானங்கள் துறை,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல்,பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனப் பல்வேறுவகையான தேர்தல்கள் நடைபெறுகின்றன. அவற்றில் வாக்களிக்கும் மக்களின் வாக்களிப்புநடத்தை என்பது ஒரேமாதிரியாக இருந்தது இல்லை. இங்குமக்களின் வாக்களிப்பு நடத்தையினைகட்சிகளின் கொள்கைகள் தீர்மானிக்கின்றது என்பதற்கு அப்பால் சூழ்நிலைகளே தீர்மானிக்கின்றது. அதேவேளை இலங்கைமக்களின் வாக்களிப்பு நடத்தை பிரதேசரீதியாக வேறுபடுவதனையம் அவதானிக்க முடிகின்றது. இந்தவிடயத்தை கடந்த இரு ஜனாதிபதித் தேர்தல்களில்(2019, 2024) மக்களின் வாக்களிப்பு நடாத்தை எவ்வகையில் அமைந்திருந்து என்பதையும், அதுஎந்தவகையில் வெற்றி பெற்ற வேட்பாளருக்குசாதாகமாக அமைந்தது என்பதனையும் ஒரு ஒப்பீட்டு அடிப்படையில் இவ்வாய்வு நோக்குகின்றது.

கடந்த இருஜனாதிபதித் தேர்தல்களும் வரலாற்றில் தடம்பதித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்த தேர்தல்களாகும். குறித்த இரு தேர்தல்களிலும் வெற்றி பெற்றவாக்காளர்களின் வெற்றியில் மக்களின் வாக்களிப்புநடாத்தை எத்தகையதாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குத் தேவையானதகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன். அவைதரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுவிவரணப் பகுப்பாய்வின் அடிப்படையில் அய்வின் முடிவுஎட்டப்பட்டிருந்தது. இவ்வாய்வானது ஒருகலப்பு ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டதுஆகும். இவ்வாய்வின் முடிவாக 2019ஆம் ஆண்டுத் தேர்தலானது இனரீதியிலானகாரணிகள் மக்களின் வாக்களிப்பு நடாத்தையினைத் தீர்மானித்திருந்ததையும், 2024ஆம் ஆண்டுத் தேர்தலானது கடந்த ஆட்சியில் மக்கள் எதிர்நோக்கியவரிசையுகத்தை மாற்றியமைக்கவும் அதற்குகாரணமாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைவலியுறுத்தியும் மக்களின் வாக்களிப்புநடாத்தை இருந்தததையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆயினும், வடகிழக்கு மக்களின் வாக்களிப்புநடாத்தை ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தமட்டில் ஒரேமாதிரியாக இருந்துவருவதையும், குறிப்பாகபெரும்பான்மை சிங்களமக்களின் வாக்களிப்புநடத்தைக்கு எதிர்மறையாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

**அறிமுகம்:**

இலங்கையில்மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் நிறைவேற்று ஜனாதிபதிமுறைமையினை அறிமுகப்படுத்தியவர் ஜே. ஆர்.ஜெயவர்த்தனாஆவார். 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசுயாப்பின் ஊடாக இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதுவரையில் 08 ஜனாதிபதிகள் இப்பதவியினைவகித்துள்ளனர். தற்போதுஒன்பதாவது ஜனாதிபதியாகஅநுரகுமாரதிஸாநாயக்காபதவிவகிக்கின்றார். இப்பதவிக்கான முதலாவது தேர்தல் 1982ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்வாண்டு (2024) நடைபெற்றது 09

நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் எட்டாவதுதேர்தலாகும். ஜே. ஆர். ஜெயவர்த்தனா,ரணசிங்கபிரேமதாச,சந்திரிக்காபண்டாரநாயக்ககுமாரதுங்க,மஹிந்த ராஜபக்ச,மைத்திரிபாலசிறிசேனமற்றும் கோட்டாபய ராஜபக்சஆகியோர் நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாகஆட்சிசெய்துள்ளனர். கோட்டாபய ராஜபக்சவிற்குப் பின் பாராளுமன்றவாக்கெடுப்பின் மூலமாகரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிவகித்திருந்தார்.

இதுவரையில்,எட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் இடம்பெற்றிருந்தாலும் இவ்வாய்வானது, இறுதியாக இடம்பெற்ற 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுநடைபெற்றதேர்தல்கள் தொடர்பிலானதொருஒப்பீட்டுஆய்வாகவேஅமைந்துள்ளது. ஏழாவதுநிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக 2019ஆம் ஆண்டுதேர்தல் நடைபெற்றது. இலங்கைத் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாகநடப்பு ஜனாதிபதிஒருவரோ,பிரதமரோ,அல்லதுஎதிர்கட்சித் தலைவரோபோட்டியிடுவதைத் தவிர்த்திருந்தஒருதேர்தலாக இது அமைந்திருந்தது. குறித்த இத்தேர்தலில் பொதுசனமுன்னனிவேட்பாளர் கோட்டாபய ராஜபந்ச 52.25 வீதமானவாக்குகளைப் பெற்றிருந்தார். 2024ஆம் ஆண்டுநடைபெற்ற 9ஆவது ஜனாதிபதித் தேர்தலில் தேசியமக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரதிசாநாயக்காமுதல் சுற்றில் 42.31 வீதமானவாக்குகளைப்பெற்றிருந்தார் ஆயினும் 50 வீதத்தைதாண்டாமையினால் இரணடாம் சுற்றில் 55.89 வீதமானவாக்குகளைப் பெற்றுவெற்றிபெற்றிருந்தார். இத் தேர்தலில் இதற்குமுன்னரான ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாம் நிலையில் இருந்தவேட்பாளர் வெற்றிபெற்றிருந்தமைஒருவரலாற்றுப் பதிவாக இருந்தது.

**திறவுச் சொற்கள்:**நிறைவேற்று ஜனாதிபதி, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்,ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்,பொதுசனமுன்னனி,தேசியமக்கள் சக்தி,வாக்களிப்புநடாத்தை

**ஆய்வுப் பிரச்சினை:**

இலங்கையில் 1982ஆம் ஆண்டுமுதல் 2024ஆம் ஆண்டுவரைஎட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் இறுதியாக இடம்பெற்ற இரு தேர்தல்களும் வரலாற்றில் இடம் பிடித்ததேர்தல்களாகவிளங்குகின்றன. இவை முதன்மைப்படுத்தப்படுவதற்கானகாரணங்கள் என்ன? வெற்றியில் தாக்கம் செலுத்தியகாரணிகள் எவை என்பவற்றைஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வுமேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலங்கையில் ஜனாதிபதிமுறைமை:**

இரண்டம் குடியரசுஅரியலமைபின் கீழ் உருவாக்கப்பட்டநிறைவேற்றுஅதிகார ஜனாதிபதிமுறைமை இலங்கையில் ஒருநிலையானதும் பலமிக்கதுமானஒருநிர்வாகத் துறையொன்றைதாபிக்கும்நோக்கிலும்உருவாக்கப்பட்டிருந்தது. அதேவேளை ஜனாதிபதித் தெரிவில் நாட்டுமக்கள் சகலரும் பங்குபற்றுவதால் தேசியஒருமைப்பாட்டைஉருவாக்க இலகுவானதுமானதொருஆட்சிமுறையாகவேஅறிமுகப்படுத்தப்பட்டது(கீனன் அ. & இக்பால் ஹ.). ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவேட்பாளர் வெற்றிபெறுவதற்குசெல்லுபடியானமொத்தவாக்குகளிள் அரைவாசிக்குமேல் பெற்றுக்கொள்ளவேண்டும்.இவரதுநிறைவேற்றுஅதிகாரங்களைநோக்கும் போது, இலங்கை ஜனாதிபதியானவர் அரசின் தலைவரும்,அரசாங்கத்தின் தலைவரும்,முப்படைகளினதும் தலைமைக் கட்டளையிடும் அதிகாரியுமாவார். இதனடிப்படையில் இவ் ஜனாதிபதிப் பதவியானதுஅரசியலதிகாரத்தைபிரயோகிக்கும் சகலஅதிகார மூலங்களும் ஒன்றுதிரட்டப்பட்டு ஜனாதிபதிபதவிஉருவாகப்பட்டுள்ளது. குறித்த ஜனாதிபதிபதவியைதெரிவுசெய்வதற்காக இதுவரைஎட்டுதேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 2019, 2024 ஆண்டுகளில் இடம் பெற்றதேர்தல்கள் முடிவுகள் தொடர்பாகவே இங்குஒப்பீட்டுஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

**2019 ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்:**

2019 ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். ஆயினும் மூன்றுவேட்பாளர்களுக்கு இடையிலேயேமும்முனைபோட்டிநிலவியிருந்தது. இப் போட்டியாளர்களாகபின்வருவோர் விளங்கினர். அவர்களாவன:கோட்டாபயக் ராஜபக்ச, சஜித் பிரேமதாசமற்றும் அனுரகுமாரதிசாநாயக்கஆகும்.இவர்கள் பெற்றவாக்குகள் மற்றும் அவற்றின் விகிதாசாரம் பின்வருமாறு:


| **இல** | **வேட்பாளர் பெயர்** | **பெற்றவாக்குகள்** | **விகிதம்** |
|---|---|---|---|
| 01 | கோட்டாபயக் ராஜபக்ச | 6,924,255 | 52.25 |
| 02 | சஜித் பிரேமதாச | 5,564,239 | 41.99 |
| 03 | அனுரகுமாரதிசாநாயக்க | 418,553 | 3.16 |

**மூலம்:இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு**

2019 ஆம் ஆண்டுநடைபெற்றதேர்தலானதுஏழாவதுநிறைவேற்றுஅதிகார ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காகநடைபெற்றிருந்தது. குறித்ததேர்தலில் நடைமுறையிலிருந்த ஜனாதிபதியோ,பிரதமரோஅல்லதுஎதிர்க்கட்சித் தலைவரோபோட்டியிடுவதைத் தவிர்த்திருந்தனர். இத் தேர்தல் முடிவின் அடிப்படையில் இலங்கைபொதுசனமுன்னனிசார்பில் போட்டியிட்டிருந்தகோட்டாபய ராஜபக்ச 52.25 வீதமானவாக்குகளைப் பெற்றிவெற்றிபெற்றிருந்தார்.

இவர் இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்துவாழும் வடகிழக்கில் உள்ளஐந்துமாவட்டங்கள் மற்றும் மமலையகத்தின் நுவரேலியாமாவட்டம் ஆகியவைதவிர்ந்த 16 மாவட்டங்களில் பெரும் வாக்குவித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார். மறுபுறம் ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச41.99 வீதமானவாக்குகளையேபெற்றிருந்தார். தமிழ் மக்கள் செறிந்துவாழும் 06 மாவட்டங்களில்இவர் அதிகபடியானவாக்குவித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார். தேசியமக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டிருந்தஅனுரகுமாரதிசாநாயக்களந்தவொருமாவட்டத்திலும் வெற்றிபெற்றிருக்கவில்லை. இவர் 418, 553 வாக்குகளையேபெற்றிருந்தார். இதன் விகிதம் 3.16ஆகும்.இதனைபின்வரும் விளக்கப்படத்தின் மூலம் விளங்கிக் கொள்ளமுடியும்.

**மாவட்டரீதியாகபிரதானவேட்பாளர்களின் வெற்றி**




**மூலம்:விக்கிப்பீடியா, இலங்கைஅரசுத் தலைவர் தோதல், 2019**


© 2025, IRJTSR

**2019 ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியில் தாக்கம் லுெத்தியகாரணிகள்:**

2019ஆம் ஆண்டு ஜகாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சபெற்றுக்கொண்டதீர்க்கமானவெற்றியில் பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. இதற்குமுந்திய ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைமக்களின் ஆதிக்கம்,தேசியபாசுகாப்பு,பொருளாதாரமந்தநிலை,செயற்றிறன் அற்றஆட்சிஎன்பவைகுறித்ததேர்தலில் செல்வாக்குச் செலுத்தியிருந்தனஎனலாம். உள்நாட்டுயுத்தகாலத்தில் பாதுகாப்புச் செயலாளராகச் செயற்பட்டுஉள்நாட்டுயுத்தத்தினைமுடிவிற்குகொண்டுவந்த இவர் முன்னாள் ஜனாதிபதிமஹிந்தராயபக்சவின் சகோதரரும் ஆவார். சிங்களதேசியவாதத்தைமுன்னிறுத்தும்ஒருவராகஅறியப்பட்ட இவர் சிறுபான்மைமக்களிற்குஎதிரானவராகவேபார்க்கப்பட்டிருந்தார். மட்டுமன்றி இதற்குமுன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தனதுசகோதரரின் தோல்வியில்சிறுபான்மைமக்களின் வாக்குகனிசமானஅளவில் தனதுசகோதரருக்குஎதிராக இருந்தமையேகாரணம் என்பதனைச் மாற்றியமைக்கும் வகையிலேயேதனிச் சிங்களவாக்குகளால் ஒருவர் ஜனாதிபதியாகமுடியும் என்பதைசெயற்படுத்தும் வகையிலேயே இச்சிங்களதேசியவாதத்தைமுன்னிறுத்தியிருந்தார்.

இதற்குமுந்தியஆட்சியில் தேசியபாதுகாப்பிற்கு இருந்தஅச்சுறுத்தலும் இவரின் வெற்றிக்குகாரணமாக இருந்தது. இந்தியபுலனாய்வுத் துறையின் முன்னெச்சரிக்கைகிடைத்திருந்தும் கிறிஸ்தவதேவாலயங்கள் மற்றும் நட்சத்திரஹோட்டல்களில் இடம்பெற்றஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நாட்டுமக்கள் அதிருப்திகொண்டிருந்தநிலையில் கோட்டாபய ராஜபக்சவினாலேயேதேசியபாதுகாப்பினைநிலைநிறுத்தமுடியும் எனவாக்காளர்கள் தீர்மானித்திருந்தனர்.

மூன்றுதசாப்தங்களுக்குமேலாகஉள்நாட்டுயுத்தத்தில் ஈடுபட்டிருந்ததமிழீழவிடுதலைப் புலிகளைவெற்றிகொண்ட இராணுவநடவடிக்கையின் போதுசெயற்றிறன் மிக்கபாதுகாப்புச் செயலாளராகச் சேவையாற்றிய இவரின் செயற்றிறனைபெரும்பான்மைசிங்களமக்கள் தேசியபாதுகாப்பிற்கும்,சிங்களதேசியவாதத்தின் காப்பாளருமாகஅடையாளப்படுத்தியிருந்தனர். இவைதவிரசிங்களபௌத்ததேரர்களின் ஆதரவு,ஐக்கியதேசியக் கட்சியின் பலவீனமானபிரச்சாரங்கள்,அதிகரித்தகடன்தொகைஎன்பனவும் காரணமாகஅமைந்தன. மட்டுமன்றி,முன்னாள் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனமற்றும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலானமுரண்பாடுகளும் வெற்றியில் தாக்கம் செலுத்தியிருந்தன. அத்துடன் நாடாளாவியரீதியில் பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் கட்டமைப்பும் வெற்றிக்குகாரணமானஅமைந்திருந்தது. 2016இல் ராஜபக்சசகோதரரர்கள் பொதுஜன பெரமுனக் கட்சியைஆரம்பித்ததுமுதல் படிப்படியாகஅடிமட்டமக்கள் வரை இணைக்கப்பட்டிருந்தமைதனித்துவமிக்கதாக இருந்தது. 2018 உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனகட்சிஅமோகவெற்றிபெற்றிருந்தது. இதுவும் இவரின் வெற்றிக்குகாரணமாகஅமைந்திருந்தது. மறுபுறம்,சஜித் பிரேமதாசாவின் நிலையும் கோட்டாபயவின் வெற்றியைத் தீர்மானித்ததுஎனலாம். கட்சியின் தலைவரும் பிரதமருமானரணில் விக்கிரமசிங்கவுடனானஉள்ளகமுரண்பாட்டின் பின்னர் தேர்தலுக்குசிலநாட்களுக்குமுன்னரே ஜனாதிபதிவேட்பாளராக சஜித் பிரேமதாசஅறிவிக்கப்பட்டிருந்தார். இதனால் அவரின் தேர்தல் பிரச்சாரங்கள் பலவீனமாகவே இருந்தன. மட்டுமன்றிபெரும்பாலானதனியார் ஊடகங்கள் ராஜபக்சகுடும்பத்திற்குஆதரவாகபிரச்சாரத்தைமுன்னெடுத்திருந்தமையும் ராஜபக்சவின் வெற்றிக்குவலுச் சேர்த்திருந்தன.

**2024 ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்:**

2024ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். ஆயினும் மூன்றுவேட்பாளர்களுக்கு இடையிலேயேமும்முனைபோட்டிநிலவியிருந்தது. இப் போட்டியாளர்கள் ஆவன: அனுரகுமாரதிசாநாயக்க, சஜித் பிரேமதாசமற்றும் ரணில் விக்கிரமசிங்கஆகும் இவர்கள் பெற்றவாக்குகள் மற்றும் அவற்றின் விகிதாசாரம் பின்வருமாறு:


© 2025, IRJTSR

| இல | வேட்பாளர் பெயர் | பெற்றவாக்குகள் | விகிதம் |
|---|---|---|---|
| 01 | அனுரகுமாரதிசாநாயக்க | 5,634,915 | 42.31 |
| 02 | சஜித் பிரேமதாச | 4,363,035 | 32.76 |
| 03 | ரணில் விக்கிரமசிங்க | 2,299,767 | 17.27 |

**மூலம்:இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு**


வரலாற்றில் முதற்தடவையாகஎந்தவொருவேட்பாளரும் முதல்கட்டத் தேர்வில் 50 வீதத்திற்கும் அதிகமானவாக்குகளைப் பெற்றுக்கொள்ளாமையால் இரண்டாம் கட்டதெரிவுவாக்குஎண்ணப்பட்டு இறுதிமுடிவுஎடுக்கப்பட்டது.

| இல | வேட்பாளர் பெயர் | பெற்றவாக்குகள் | | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | அனுரகுமாரதிசாநாயக்க | 5,634,915 | 105, 264 | 55.89 |
| 02 | சஜித் பிரேமதாச | 4,363,035 | 167, 867 | 44.11 |

**மூலம்:இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு**

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் 9ஆவது நிறைவேற்று ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தேர்தல் நடைபெற்றது. நடப்பு ஜனாதிபதியாக இருந்தரணில் விக்கிரமசிங்கசுயேட்சைவேட்பாளராக இத்தேர்தலில் போட்டியிட்டிருந்தார். இத் தேர்தலில் இலங்கையில் பாரியதொருஅரசியல் மாற்றம் நிகழ்ந்தது. அனுரகுமாரதிசாநாயக்காபெற்றவெற்றி இதற்குமுந்தையதேர்தலில் மூன்றாம் நிலையில் இருந்தஒருவேட்பாளர் ஜனாதிபதியாகவெற்றிபெற்றமைமுதல் முறையாகப் பதிவாகியது.

**மாவட்டரீதியாகபிரதானவேட்பாளர்களின் வெற்றி**




**மூலம்:விக்கிப்பீடியா, இலங்கைஅரசுத் தலைவர் தோதல், 2024**

மாவட்டஅடிப்படையில்,பெரும்பான்மைசிங்களமக்கள் வாழுகின்றமாவட்டக்களில் அனுரகுமாரதிசாயாக்கவும்,தமிழ், முஸ்லீம் மற்றும் மலயகத் தமிழ் மக்கள் வாழுகின்றமாவட்டங்களில்



© 2025, IRJTSR 

(யாழ்ப்பாணம்,வன்னி,திருகோணமலை,மட்டக்களப்பு,திகாமடுல்லபதுளைமற்றும் நுவரேலியா) சஜித் பிரேமதாசாவெற்றிபெற்றதையும் மேற்படிவரைபடத்தில் மிகத் தெளிவாகஅடையாளம் காணமுடியும்.

இலங்கையில் இதற்குமுன்னர் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றிருந்தது. இதில் பொதுஜன முன்ன்னிவேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவெற்றிபெற்றிருந்தார். ஆயினும் 2022 ஆம் அரகலயபோராட்டம் என்றுஅழைக்கப்படும் மக்கள் போராட்டத்தின் காரணமாக 2022 ஜீலை 14ஆம் திகதிதனதுபதவியை இராஜனாமாச் செய்திருந்தார். இவரின் மீதமுள்ளஆட்சிக்காலத்திற்குஅரசியலமைப்பின் 40ஆவது பிரிவின் படிபாராளுமன்றத்தில் நடாத்தப்பட்டவாக்கெடுப்பின் அடிப்படையில்,அன்றையபிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

**2024 ஆம் ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமாரதிசாயாக்காவின்வெற்றியில் தாக்கம் லுத்தியகாரணிகள்:**

2019 ஆம் ஆண்டுநடைபெற்றதேர்தலில் தேசியமக்கள் சக்திசர்பாகப் போட்டியிட்டஅனுரகுமாரதிசாநாயக்கா மூன்றாவது இடத்தைப் பிடித்தார். இத் தேர்தலில் வெறும் 03வீதமானவாக்குகளையே இவர் பெற்றிருந்தார். 2024ஆம் ஆண்டுஜனாதிபதித் தேர்தலானதுஆட்சிமாற்றத்துடன் முடிவிற்குவந்தது. இடதுசாரிக் கொள்கையொன்றைஅடிப்படையாகக் கொண்டகட்சியொன்றுஆட்சிபீடம் ஏறும் முதலாவதுசந்தர்ப்பமாகவும் இது அமைகின்றது.உண்மையில், 2022இல் அரகலயஎன்றுஅழைக்கப்படும் மக்கள் போராட்டத்தின் மூலம் இளைஞர்கள் வலியுறுத்தியது இம்மாற்றத்தையேஆகும்.கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்திற்குஎதிராகநடத்தப்பட்டபேராட்டங்களில் அனுரகுமாரதிசாநாயக்காளின் பங்களிப்புமுக்கியமானதாக இருந்ததுஎன்றும்,போராட்டத்தில் மக்கள் விடுதலைமுன்னனிநேரடித் தொடர்புஎதுவும் இல்லாதபோதும் மக்களைஅதனூடாகத் தம்வசப்படுத்திகொண்டார்கள(பிரசாத் ர).அதனால் வந்தபலனாகவே இந்தவெற்றியைப் பார்க்கமுடிகின்றது.இலங்கைசுதந்திரம்
பெற்றகாலத்திலிருந்து,இலங்கைஅரசியலானதுஉயர்வகுப்புசார்ந்தஆதிக்ககுழுக்களின் கைகளிலேயேதங்கியிருந்தது. அதாவது 75 வருடங்களாகஆட்சிசெய்த இவ்உயர் குலாமினரை இனியும் மக்கள் நம்புவதற்குத் தயாரில்லைஎன்பதை இத்தேர்தல் வலியுறுத்தியிருந்தது. காரணம் இவர்களின் கடந்தகாலஆட்சியில் ஊழல்,பொருளாதாரவங்குரோத்து,வெளிப்படைத் தன்மை இன்மை,குடும்பஅரசியல் மற்றும் அரசியல் அனுசரனைஆகியவைமலிந்துகாணப்படுவதற்கு இவ்வுயர்குலாமினர் ஆட்சியேகாரணம் என்பதைவெளிப்படுத்தியதாகவேதேர்தல் முடிவும்,அதனூடானஆட்சிமாற்றமும் அமைந்திருந்தது. இவற்றின் ஒட்டுமொத்தவெளிப்பாடேபெருளாதாரவீழ்ச்சிமற்றும் வரிசையுகத்தின் ஆரம்பம் என்பதைமக்கள் திடமாகநம்பியிருந்தனர்.

இவ் அதிகாரநிலைமாற்றமானதுஇலங்கையின் பாரம்பரியஅரசியல் கலாசாரம் ஒருபுதியயுகத்திற்குள் நுழைவதைகாட்டுகின்றது. குறிப்பாகமக்கள் மையஆட்சி,பொறுப்புக் கூறல் மிக்க,ஊழலற்ற,திறமைக்குமுதன்மைஅளிக்கின்றமற்றும் மக்கள் பங்கேற்புஆட்சியைநோக்கி இலங்கைநகர்வதைக் காட்டுகின்றது.

இனத்துவம்,பிரதேசம்,சாதிமற்றும் மதம் ஆகியவற்றிற்கும் அரசியலுக்கும் இடையிலானதொடர்புகுறைக்கப்பட்டிருப்பதைகாணமுடிகின்றது(ரமேஷ் இரா. & இஃஜாஸ்). இலங்கைதேர்தல் வரலாற்றில் தேர்தல் பிரச்சாதத்தின் போது இனவாதம் முன்நிறுத்தப்படவில்லைஎன்பதைகாணமுடிகின்றத. ஆயினும், இனத்துவஅடையாளஅரசியலைவடக்கு,கிழக்குமற்றும் மலையகத்திலும் அடையாளம் காணமுடிகின்றது. குறிப்பாகயாழ்ப்பாணம்,வன்னி,திருகோணமலை,மட்டக்களப்பு,திகாமடுல்லமற்றும் நுவரேலியஆகியமாவட்டங்களில் இன்நிலைமையினைஅவதானிக்கலாம்.ஆயினும்,சிறுபான்மைமக்களுள் ஒருபிரிவினர் கட்சிசெல்வாக்கின்றிசுயமாகவாக்களித்துள்ளமையைஅவதானிக்கமுடிகின்றது. உதாரணமாக இத் தேர்தலில் அனுரகுமாரதிசாயாக்காயாழ்ப்பாணம் (27,086),வன்னி(21,412),மட்டக்களப்பு(38,832),மற்றும் நுவரேலிய(105,057)

ஆகியமாவட்டங்களில் கனிசமானஅளவுவாக்குகளைப் பெற்றுள்ளார்.குறிப்பாக இளைஞர்கள்,புத்திஜீவிகள்,சமூகஊடகங்களில் முனைப்பாகச் செயற்படுபவர்கள்வெளிஉலகத் தொடர்பைக் கொண்டவர்களாக இவர்களைஅடையாளப்படுத்தமுடியும்(ரமேஷ் இரா. & இஃஜாஸ்).

அரசஊழியர்கள் ஊழலற்றஅரசாங்கம் ஒன்றுஅமைவதினைஆதரித்திருந்தனர். இதனைதபால் மூல வாக்குகள் பிரதிபலித்திருந்தன. அரசஊழியர்கள் ஊழலின் ஆபத்தையும்,பொரளாதாரமந்தத்ததையும்,பொருள்களின் விலையேற்றத்தினையும்,வரிச் சுமையினையும்,நாட்டின் அபிவிருத்தியில் அதன் பாதகமானதாக்கத்தையும் அறிந்திருந்தனர். அரசஊழியர்கள் ஊழலுக்குதுணைபோபவர்கள் என்றகுற்றச்சாட்டு இருந்தாலும் அவர்களதுசிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை இது எடுத்துக்காட்டுகின்றது(ரமேஷ் இரா. & இஃஜாஸ்). மட்டுமன்றி இலங்கைவங்குரோத்துநிலையினைஅடைந்தமைக்கு ஊழல் காரணமாகஅரசநிறுவனங்கள் வங்குரோத்துஅடைந்திருந்தமையையும்அறிந்திருந்தனர். 80 வீதமானஅரசஊழியர்கள் தேசியமக்கள் சக்திக்குவாக்களித்திருந்தமை இதனைகாட்டுகின்றது.

**முடிவுரை:**

கடந்த இரு ஜனாதிபதிதேர்தலிலும் வெற்றிபெற்ற இரு வேட்பாளர்களின் வெற்றிக்குசாதகமானகாரணிகளைத் தொகுத்துநோக்கும் போது,2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலசிறிசேனவெற்றிபெற்றமையும்,குறித்தவெற்றியில் சிறுபான்மை இன மக்களின் வாக்களிப்புநடத்தையேவெற்றிக்குசாதாகமாக இருந்ததுஎனும் கருத்துவலுப்பெற்றமையால் அடுத்துவந்ததேர்தலில் சிறுபான்மைமக்களின் வாக்குப் பலம் இன்றியேஒரு ஜனாதிபதிவெற்றிபெறமுடியும் என்பதைநிறுபிக்கபெரும்பான்மைசிங்களமக்கள் ஒன்றுதிரண்டமையை 2019 தேர்தலில் அவதானித்தவிடயமாகும். அதாவது 2019 ஆண்டுதேர்தலானதுமுற்றுமுழுதாக இனத்துவஅடிப்படையில் சிங்களமக்களும்,தமிழ் மக்களும் வாக்களிப்புநடாத்தையைக் கொண்டிருந்தமையைஅவதானிக்கமுடிகின்றது.தவிர, 2015 தேர்தலில் மஹிந்த ராஜபச்சதோற்றபிற்பாடுயுத்தகாதாநாயகர்கள் சிறுபான்மைமக்களின் வாக்குப் பலத்தால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள் என்கின்றவிடயம் சிங்களமக்கள் இன ரீதியாகவாக்களிக் தூண்டியிருந்தது.

தேசியபாதுகாப்புஎன்பதும் 2019 தேர்தலில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இதற்குக் காரணம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் எனக் குறிப்பிட்டாலும், ஜனாதிபதிவேட்பாளரில் ஒருவர் உள்நாட்டுயுத்தகாலத்தில் தமிழீழவிடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டபோதுபாதுகாப்புச் செயலாளராக இருந்தமையினால் தேசியபாதுகாப்புஎன்பதும்பேசுபொருளாகியது. ஈஸ்டர் தாக்குதல் இத்தகையபிரச்சாரத்திற்குவலுச் சேர்ப்பதாக இருந்தது.

நல்லாட்சிக் காலத்தின் இறுதியில் பிரதமர் பதவிதொடர்பில் ஏற்பட்டகுழப்பங்கள் நடைமுறையில் இருந்தஆட்சியாளரின் அரசியல் ஆளுமையின் பலவீனங்களைஎடுத்துக்காட்டின. எனவேபலவீனமானஆட்சியைமாற்றியமைக்கமக்களும் விரும்பினர். ஆயினும், 2019இல் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியின் சிறுபான்மைவிரோதப் போக்கும் அதனால் ஏற்பட்டவெளிநாட்டுஉறவுகளில் ஏற்பட்டவிரிசல்கள்,கொவிட் தாக்கம்,அதனால் ஏற்பட்டபொருளாதாரவீழ்ச்சி,அனுபவமற்றஆட்சித் தலைமை,சிறந்தகொள்கைவகுப்பதில் ஏற்பட்டபின்னடைவு,மற்றும் அரசியல் ஊழல்வாதிகளின் வசமாகியமைஆகியவற்றினால் இலங்கைஅடைந்தவங்குரோத்துநிலைமையும்அதனால் ஏற்பட்டவரிசையுகம் என்பவற்றிற்குஎதிராகமக்கள் கிளர்ச்சிஅரகலியபோராட்டமாகவலுப்பெற்று இறுதியில் ஜனாதிபதிபதவிவிலகியநிலைஏற்பட்டது.

இந்த இடத்தில் பெரும்பாலான இலங்கைமக்கள் தங்களது ஜனாதிபதித் தெரிவுசரியாக இருந்ததா? அவரின் ஆளுமைதொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதா? அவரதுஅரசியல் அனுபவம் தொடர்பில் சிந்தித்துவாக்களித்தோமா? என்கின்றகோள்விவிரிசையுகத்தில் மக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்கியிருந்தனர். அத்துடன் ஊழல்

அரசியல் என்பதும்வலுப்பெறத் தொடங்கியிருந்தமையால் மக்கள் இதற்குமாற்றானஒருசக்திதொடர்பில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

இந்த இடத்திலேயேதேசியமக்கள் சக்தியின் புதியஅரசியல் கலாசாரம்தொடர்பில்சிந்திக்கத் தலைப்பட்டமக்களின் தெரிவாகஉணரப்பட்டது. காரணம் அரகலியபோராட்டத்தில் இவர்களின் பங்களிப்பு,ஊழலுக்குஎதிராக இவர்களின் செயற்பாடு,குடும்பஆட்சியைஎதிர்க்கும் கட்சிக் கொள்கை,கடந்தஆட்சியில் தவறிளைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்கின்றஉறுதிமொழி,களவாடப்பட்டசொத்துக்கள் மீளப்பெறப்படும் என்கின்றபிரசச்சாரங்கள் முக்கியத் துவப்படத்தொடங்கியது. மட்டுமன்றி இனரீதியாகவேமதரீதியாகவோசிந்திக்கமக்கள் தலைப்படவில்லை. காரணம் கடந்தகாலங்களில் இத்தகையஇனத்துவவாக்களிப்புநடத்தையேகடந்தகாலவரிசையுகத்திற்குகாரணம் என்பதைஅனுபவரீதியாகஅறிந்திருந்தனர்.

இந்த இடத்தில் சிறுபான்மைமக்கள் வாக்களிப்புநடத்தைபெரும்பாலும் கடந்தகாலத்தைப் போன்று இனரீதியாகசிந்திக்கும்போக்கேகாணப்பட்டது. இதற்குக் காரணம் வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதியும் சிறுபான்மைமக்களுக்குசார்பானதாக இருந்ததில்லை. யுத்தமுடிவின் பின்னர் சிறுபான்மைமக்களின் வாக்களிப்பானதுபெரும்பான்மைமக்களின் வாக்களிப்புநடாத்தைக்குஎதிரானதாகவே இருந்துவந்துள்ளது. இதனைஓரளவுக்கேனும் இந்ததேர்தலிலும் காணமுடிகின்றது.

ஒட்டுமொத்தமாகபார்க்கின்றபோதுஊழலுக்குஎதிரானஆட்சியையும்,பொருளாதாரமீட்சிக்கானஆட்சியையுமேமக்களின் வாக்களிப்புநடாத்தைகாட்டிநிற்கின்றது. ஆயினும் இலங்கைமக்களின் வாக்களிப்புஎன்பது சூழ்நிலையே தீர்மானிக்கும் தன்மைகொண்டதாகவேஅவதானிக்கமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்:**


[1] ரமேஷ் இரா. & இஃஜாஸ் (2024), இலங்கைத் தேர்தல் அரசியலில் மாற்றமுறும் தன்மை: 2024 ஜனாதிபதித் தேர்தலும் அதன் தாக்கமும். மாற்றம்,Journalism for citizens

[2] பிரசாத் ர. (2024),கடந்ததேர்தலில் வெறும் 3வீத வாக்குமட்டுமேபெற்ற இவர், இம்முறைவென்றதுஎப்படி?,பிபிசி,கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு.

[3] இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு,https://elections.gov.lk/ta/elections/PRE_election_2024_T.html

[4] கீனன் அ. & இக்பால் ஹ. (2019), ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ச இலங்கைமக்களைஒருமுகப்படுத்துவாரா? விடிவெள்ளி